## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான இலங்கை தராதர அங்கீகார சபையின் (''சபை'') 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளினதும் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சபை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது சபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதிகாரசபை அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய

தொடர்ந்து செயற்படுவதற்கு அதிகாரசபைக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் அதிகாரசபையின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- அதிகாரசபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- சபையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் அதிகாரசபை இணங்கியிருந்ததா என்பதும்,

- சபை அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- சபையின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 05 நிலையான வைப்புக்கள் தொடர்பாக மீளாய்வாண்டிற்குரியதாக அறவிட வேண்டிய வட்டி வருமானம் 817,375 குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | இந்த நிலையான வைப்புக்களுக்குரிய வட்டி மாதாந்த அடிப்படையில் கணிப்பீடு செய்யப்படுகின்றமையால் ஒரு மாதத்திற்கு குறைந்த சில நாட்களுக்காக | காலப்பகுதிக்குரிய சகல வருமானங்களும் கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | மாத்திரம் உரிய வட்டி இவ்வாறு காண்பிக்கப்பட்டுள்ளது. 2023 ஆம் ஆண்டில் கணக்குகளுடன் இதனை சரிசெய்வதற்கு குறிப்பிடுகின்றோம். | |

**1.6. பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள**

**1.6.1 பெறவேண்டிய பணம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளின் போது 16 நிறுவனங்களுக்குரிய பட்டியலிடப்பட்ட கூட்டுப் பெறுமதி ரூபா 1,288,324 ஆன கடன்பட்டோர் முறையான அங்கீகாரம் இன்றி பதிவழிக்கப்பட்டிருந்தது. | கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் வருமானமொன்று இனங்காணக் கூடிய சந்தர்ப்பம் வரையில் அது கணக்கீடு செய்யப்பட வேண்டியிருந்தமையால் 2021 ஆம் ஆண்டின் போது இந்த வருமானம் கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளது. எனினும், அதன் பின்னர் ஏற்பட்ட சம்பவங்களினால் 2022 ஆம் ஆண்டின் இறுதி கணக்குகள் தயாரிக்கும் போது அந்த பெறவேண்டிய வருமானங்களில் நிலைமையை காட்ட வேண்டி ஏற்பட்டிருந்தது. அதன் பிரகாரம் வருமானம் ஒன்று உருவாகவில்லை என ஏற்றுக்கொள்ளக் கூடிய சான்றுகளுடன் உள்ள பட்டியல் திரண்ட நிதியத்திற்கு எதிராக பதிவழிக்கப்பட்டிருந்தது. எதிர்காலத்தில் நிர்வாக சபையின் அங்கீகாரத்துடன் இதனை மேற்கொள்வதற்கு குறிப்பிடுகின்றோம். | கடந்த ஆண்டுகளுக்குரியதாக பிழையாக கணக்குகளில் குறிப்பிடப்பட்ட போதிலும், அகற்றும் போது முறையான அங்கீகாரம் பெறப்படல் வேண்டும். |
| (ஆ) 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளுக்குரியதாக விநியோகிக்கப்பட்ட 16 பட்டியல்களில் கிடைக்க வேண்டிய ரூபா 966,420 ஆன வருமானத்தை அறவிடுவதற்கு | இந்த தவறு எதிர்காலத்தில் ஏற்படாமல் இருப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | பெறவேண்டியவைகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | | |
| (இ) | 04 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் கொண்டுவரப்படுகின்ற பெறுமதி ரூபா 175,959 ஆன பெறுமதிசேர் வரி தொகை (VAT) மற்றும் ரூபா 32,558 ஆன தேசத்தை கட்டியெழுப்பும் வரி (NBT) என்பவற்றை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த மீதி தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கோரிக்கைக்காக பதிலொன்று இது வரை கிடைத்திருக்கவில்லை. PED/01/2021(I) சுற்றறிக்கையின் பிரகாரம் கணக்காய்வு குழுவின் பரிந்துரையுடன் நிர்வாக சபையின் அங்கீகாரத்திற்கு சமர்ப்பித்த பின்னர் பதிவழிப்பதற்கு குறிப்பிடுகின்றோம். | பெறவேண்டியவைகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 2021 நவம்பர் 16 ஆம் திகதிய 2021/01 ஆம் இலக்க பொது முயற்சிகள் தொடர்பான செயற்பாட்டு வழிகாட்டி கைநூலின் 6.6 ஆம் பந்தி. | மீளாய்வாண்டிற்குரிய வரைவு ஆண்டறிக்கையின் பிரதியொன்று 60 நாட்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும். கணக்காய்வு திகதி வரையிலும் அந்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | ஆண்டறிக்கையின் வரைவு நிதிக் கூற்றுக்களுடன் சமர்ப்பிப்பதற்கு குறிப்பிடுகின்றோம். | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நிதிக் கூற்றுக்களுடன் மீளாய்வாண்டின் ஆண்டறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 41,895,359 மிகையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 14,524,699 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் 27,370,660 அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டில் ஆளனி சம்பள செலவினம் ரூபா 3,459,575 இனாலும், உடன்படிக்கை செய்யப்பட்ட சேவைகளுக்கான செலவினம் ரூபா 4,958,810 இனாலும் அதிகரித்திருந்த போதிலும், ஆண்டின் வருமானம் ரூபா 33,355,969 இனால் அதிகரித்திருந்தமை இந்த முன்னேற்றத்திற்கு பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட 2020 – 2022 வரையான காலப் பகுதியில் தரச்சான்றிதழ் பெற்றுக் கொள்வதற்காக சபைக்கு 74 விண்ணப்பங்கள் கிடைத்திருந்ததுடன், 16 விண்ணப்பங்களுக்காக சான்றிதழ் வழங்குவதற்கு சபைக்கு 14 மாதங்கள் முதல் 34 மாதங்களுக்கு இடையிலான கால வீச்சினை எடுத்திருந்தது, அவ்வாறே மீளாய்வாண்டின் இறுதி திகதி வரையிலும் சான்றிதழ் விநியோகிக்கப்படாத விண்ணப்பங்களின் எண்ணிக்கை 13 ஆகும். | விண்ணப்ப பத்திரம் கிடைத்தது மாத்திரம் தரச்சான்றிதழ் வழங்க முடியாது உரிய செயற்பாடுகளை பூர்த்தி செய்வதற்கு தரப்படுத்தல் கட்டங்கள் பல உள்ளன. அந்த கட்டங்களுக்கு இடையே உரிய கோரப்பட்ட விண்ணப்பித்த நிறுவனம் மேற்கொள்ள வேண்டிய சரி செய்தல்கள் மேற்கொண்டு எங்களது நிறுவனத்திற்கு கையளிக்க வேண்டும். அந்த செயற்பாடுகளில் தாமதங்கள் ஏற்படுகின்றமையால் தராதரப்படுத்தல் வழங்குதல் தாமதமடைந்துள்ளது. அதற்கு மேலதிகமாக கொவிட் தொற்று நோய் அதிக அளவில் காணப்பட்ட காலப்பகுதியின் காரணமாக அதுவும் இந்த தாமதத்திற்கு தாக்கமளித்திருந்தது. | செயற்பாட்டு நடவடிக்கைகளை நிறைவேற்றுவதற்காக பொருத்தமான நிர்வாக முறைமையொன்றை ஈடுபடுத்தி அந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையினால் 2022 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தில் முழுமையான 167 செயற்பாடுகள் வெளிப்படுத்தப்பட்டிருந்ததுடன், அதில் 30 செயற்பாடுகளுக்காக மாத்திரம் நிதி இலக்குகள் வழங்கப்பட்டிருந்தது. நிதி இலக்குகள் வழங்கப்பட்டிருந்த கூட்டுப்பெறுமதி ரூபா 823,000 ஆன 10 செயற்பாடுகள் மற்றும் நிதி பெறுமதி சமர்ப்பிக்கப்படாதிருந்த 45 செயற்பாடுகள் என்பவற்றில் எதிர்பார்க்கப்பட்ட செயல் முன்னேற்றம் அடையப்பட்டிருக்கவில்லை. | 2024 இன் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கும் போது இயலுமான சகல செயற்பாடுகளுக்காவும் நிதி பெறுமதியை உள்ளடக்குவதற்கு குறிப்பிடுகின்றோம். எனினும் சில செயற்பாடுகளுக்காக நிதி இலக்கினை வழங்குதல் பிரயோக ரீதியில் முடியாதிருந்தது. | செயல் நடவடிக்கைத் திட்டத்தில் செயல் முன்னேற்றத்தை அளவிடக் கூடிய வகையில் குறித்துரைத்த இலக்குகளுடன் எதிர்பார்க்கப்பட்ட கிரயங்களும் தயாரிக்கப்படல் வேண்டும். |